Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 22/2024**

**Deposition of PW.2 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அய்யம்மாள் | ஜாதி | : | |
| க/பெ | : | அழகர்சாமி | தொழில் | : | தூய்மை பணியாளர் பணி |
| கிராமம் | : | பிள்ளையார்நத்தம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 52/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.04.2026.

(எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் பிள்ளையார்நத்தத்தில் குடியிந்துகொண்டு தூய்மை பணியாளராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 ஹரிஹரன் எனது மகன். நாச்சிமுத்து எங்களது பக்கத்து வீட்டுக்காரர். கடந்த 09.11.2023 அன்று இரவு 10.45 மணிக்கு மேல் என் மகள் என் வீட்டிற்கு பிரசவத்திற்காக வந்திருந்தார். நானும், எனது மகள் அருணாகோமதியும், எனது மகன் ஹரிஹரனும், எனது மருமகள் காளீஸ்வரியும், எனது கணவர் அழகர்சாமி ஆகியோர் வீட்டில் இருந்தபோது, மது அருந்திவிட்டு எதிரி அவர்களது வீட்டிலிருந்து கொம்மா, கோத்தா என்று இன்னும் அதிகமாக வார்த்தைகளால் ஆபாசமாக பேசிக்கொண்டிருந்தார். எனது மகன் அவர் வீட்டிற்கு சென்று எதற்காக ஆபாசமாக பேசுகிறீர்கள் என்றும், பெண்கள் இருக்கிறார்கள் என்றும் கூறினார். அதற்கு எதிரி நான் என்னுடைய வீட்டில் பேசுகிறேன், உனக்கு என்ன என்று கேட்டு அவர் வைத்திருந்த பெரிய கத்தியால் என் மகனின் புருவத்தில் வெட்டிவிட்டார். வலது புறமா, இடது புற புருவமா என்று நியாபகமில்லை.

சம்பவத்தின் போது ஜோதிபாசு மற்றும் அருகில் இருந்தவர்கள் சம்பவத்தை பார்த்தார்கள். 108 ஆம்புலன்ஸ் மூலம் என் மகனை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு என் மகன் ஒரு வார காலம் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். போலிசார் அங்கு வந்து எங்களை விசாரித்தார்கள். சாட்சி பின்னிட்டு 108 ஆம்புலன்சில் செல்லவில்லை, ஆட்டோவில் சென்றோம் என சாட்சியம் அளிக்கிறார். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். எதிரி நாச்சிமுத்துக்கு வயது 65 இருக்கும் என்றால் சரிதான். நாச்சிமுத்துக்கும், உங்களுக்கும் எந்த முன்விரோதமும் இல்லை என்றால் சரிதான். மது அருந்தினால் தான் அது போல் பேசுவார். நாச்சிமுத்து உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் பேசவில்லை என்றால் சரிதான். நீங்கள் சம்பவ தேதியில், சம்பவத்தின் போது வீட்டிற்குள் இருந்தீர்கள் என்றால் சரிதான். யார் யார் சம்பவத்தின் போது வெளியில் இருந்தார்கள் என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். உங்கள் மகனின் வயது என்னவென்றால் 27 வயது.

நீங்களும், உங்கள் மகனும், உங்கள் கணவர் மற்றும் இரண்டு நபர்கள் சேர்ந்து எதிரியை அடித்து எதிரி சம்பவத்தன்று திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தார் என்றால் இல்லை. நீங்கள் சொல்வது உண்மையில்லை என்றும், உங்களது குடும்பத்தார்கள் அனைவரும் சேர்ந்து எதிரியை அடித்ததில் எதிரி சம்பவத்தன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றால் சரியல்ல. உங்கள் மகன் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது எதிரி கத்தியை எடுத்து வந்து உங்கள் மகனை வெட்டவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் எதிரி கத்தியால் உங்கள் மகனை வெட்டியிருந்தால் உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்ந்திருப்பார் என்றால் சரியல்ல.

உங்கள் மகன் புகார் மனுவில் மருத்துவமனைக்கு சென்று ஊசி மட்டும் போட்டுவிட்டு மருத்துவர் அவரை அனுப்பிவிட்டதாக புகார் மனுவில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. உங்களுக்கும், எதிரிக்கும் உங்கள் வீட்டின் அருகில் உள்ள சந்து சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றும், எதிரி அந்த சந்து தொடர்பான பேச்சுவார்த்தைக்கு உடன்படிவில்லை என்பதால் அவருக்கு எதிராக குற்ற வழக்கு கொடுக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீங்கள் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் பஞ்சாயத்து அலுவலகத்தில் வேலை செய்யும் உத்தரவை போலிஸ் விசாரணையில் காட்டவில்லை என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 22/2024**

**Deposition of PW.3 (LW.5)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அழகர்சாமி | ஜாதி | : | |
| த/பெ | : | பெருமாள் | தொழில் | : | பஞ்சாயத்து அலுவலகத்தில் தண்ணீர் திறந்துவிடும் வேலை |
| கிராமம் | : | பிள்ளையார்நத்தம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 54/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.04.2026.

(எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் பிள்ளையார்நத்தத்தில் குடியிந்துகொண்டு பஞ்சாயத்து அலுவலகத்தில் தண்ணீர் திறந்துவிடும் வேலை செய்கிறேன். அ.சா.1 ஹரிஹரன் எனது மகன். அ.சா.2 அய்யம்மாள் எனது மனைவி ஆவார். எதிரி நாச்சிமுத்துவை தெரியும், எனது பக்கத்து வீட்டுக்காரர். கடந்த 09.11.2023 அன்று இரவு 10.45-11.00 மணியைபோல நானும், எனது மனைவி, எனது மகள், எனது மருமகள், எனது மகன் மாடியில் படித்திருந்தான். எதிரி மது போதையில் ஆபாசமாக நிறைய பேசிக்கொண்டிருந்தார். என் மகன் எதிரியிடம் சென்று பெண் பிள்ளைகள் அருகில் இருப்பதால் ஏன் இவ்வாறு ஆபாசமாக பேசுகிறாய் என்று கேட்டார். எதிரி என் மகனை பார்த்து நீ என்ன என்னை கேட்பது என்று சொல்லிக்கொண்டே என் மகனை கீழே தள்ளிவிட்டார். கத்தியை எடுத்து வந்து எனது மகனின் வலது பக்க புருவத்தில் வெட்டிவிட்டார். எதிரியின் மருமகன் பொன்மணி மற்றும் பக்கத்து வீட்டில் இருந்த ஜோதிபாசு சத்தம் கேட்டு வந்தார்கள். காயம்பட்ட எனது மகனை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். எந்த வாகனத்தில் சென்றார் என்று எனக்கு நினைவில்லை. என் மகன் ஒரு வாரம் உள்நோயாளியாக மேற்படி காயத்திற்கு சிகிச்சை எடுத்துக்கொண்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். எதிரி உங்கள் மகனை வெட்டியதாக சொல்லும் கத்தியை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் போலிசாரிடம் கொடுத்தோம். எதிரி வீட்டிற்கும், உங்கள் வீட்டிற்கும் இடையில் சந்து

உள்ளது என்றால் சரிதான். உங்களுக்கும், எதிரிக்கும் முன்விரோதம் உள்ளதா என்றால் இல்லை. சம்பவத்தன்று உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் தனிப்பட்ட முறையில் பேசவில்லை என்றால் சரிதான். எதிரி அவர் வீட்டில் உள்ள பிரச்சனைக்காக பேசிக்கொண்டிருந்தார் என்றும், நீங்கள் அனைவரும் சேர்ந்து அடித்ததில் எதிரி சிகிச்சையில் இருந்தார் என்றால் சரியல்ல. எதிரி நீங்கள் சொல்வது போல் எந்த குற்றச்செயலிலும் ஈடுபடவில்லை என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor